Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா; 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 சித்திரை 29 (12 - 05 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 83

## புதுக்குடியிருப்பிற்கு பஸ் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அரச ஊழியரின் வேண்டுகோளுக்கிணங்க சங்குப்பிட்டியில் இருந்து புதுக்குடியிருப்புக்குப் புதிய போக்குவரத்துச் சேவையொன்று நாளை திங்கட்கிழமையில் இருந்து ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. சங்குப்பிட்டியில் இருந்து இரவு எட்டு மணிக்குப் புறப்படும் பேருந்து புதுக்குடியிருப்பை இரவு 10.30 மணியளவில் சென்றடையும் எனவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தென் தமிழீழப் பகுதியில் கோரமான முறையில் தமிழர் படுகொலை

(நமது நிருபர்)

தென்தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதாகும் தமிழர் மீது இழைக்கப்படும் சித்திரவதையின்போது உயிருடன் கண்கள் தோண்டப்படுவதாகவும், உடலிலுள்ள இரத்தம் முழுமையாக உறிஞ்சப்படுவதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. பின்னர் தலை துண்டிக்கப்பட்டு அல்லது சிதைக்கப்பட்டு சடலம் வீதியோரங்களில் வீசப்படுவதாகவும் மேலும் தெரியவருகின்றது.

அண்மையில் மட்டக்களப்பில் பல தமிழரின் சடலங்களின் தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் வீதியோரங்களில் காணப்பட்டமை தெரிந்ததே. கொல்லப்பட்ட இவர்கள் பலத்த சித்திரவதையின் பின்னர் கண்கள் தோண்டப்பட்டும், இரத்தம் உறிஞ்சப்பட்டும் கொல்லப்பட்டதாகத் தற்பொழுது அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்படுகொலைகளைச் சீருடை அணியாத சிறிலங்கா இராணுவப்பிரிவொன்று மேற்கொள்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கட்டுமரங்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

(செ. த. ஊ)

பொலிகண்டிக் கடற் பகுதியில் கட்டுமரங்களில் மீன் பிடித்துக்கொண்டிருந்த கடற்றொழிலாளர்கள் மீது கடற்படையினர் விசைப் படகில் இருந்து கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். அனைத்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தலில் சுறுசுறுப்பான வாக்களிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் வாக்குப் பதிவுகளில் மக்கள் சுறுசுறுப்புடன் ஈடுபட்டதாக தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. காலையிலேயே சுமார் 35-45சத விகிதமானோர் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்ததாக தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

இத்தேர்தலில் சுமார் 75 விதத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் தமது வாக்குக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தலில் ஐ. தே. க. முன்னணியில்!

(கொழும்பு)

சிறிலங்காவில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைத்த முடிவுகளின் படி ஐக்கிய தேசியக்கட்சி முன்னணியில் உள்ளது.

ஹப்புத்தளை நகர சபைக்கான தேர்தலில் ஐ தே.க 7 ஆசனங்களையும், சுயேச்சைக் குழு 2 ஆசனங்களையும் பெற்றுள்ளன.

ஏனைய முடிவுகள் வருமாறு:

★ கம்பஹா நகரசபை

ஐ. தே. க - 6

சிறி. ல. சு. க - 3

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெல்லாவெளி இராணுவ முகாம் அருகில் ஆண், பெண் சடலங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வெல்லாவெளி சிறிலங்கா இராணுவ முகாமிற்கு அண்மையிலுள்ள பீலியாறு என்ற இடத்திலிருந்து இரு சடலங்கள் நேற்று காணப்பட்டன. ஒன்று ஆணினுடையதாகவும், மற்றையது பெண்ணினுடையதாகவும் காணப்பட்ட போதிலும் யாருடைய சடலம் என்று இதுவரை அடையாளம் காண முடியவில்லை.

## அதிர்ச்சியால் வயோதிபமாது மரணம்

மாதகல் கடற்பகுதியில் கடந்த வியாழன் இரவு சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப் படகுகள் திடீரென மேற்கொண்ட பீரங்கித் தாக்குதல்களினால் அதிர்ச்சியடைந்த பொன்னம்பலம் பொன்னம்மா (வயது 56) என்ற வயோதிபமாது மரணமானார். (ச)

## மீண்டும் நள்ளிரவு முதல் அவசரகால சட்ட விதிகள்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு தளர்த்தப்பட்ட அவசரகாலச்சட்ட விதிகள் அனைத்தும் மீண்டும் நேற்று நள்ளிரவு 12.00மணி முதல் அமுலுக்கு வந்திருப்பதாகசிறிலங்காஅரசு அறிவித்துள்ளது.

அரசாங்கம் விடுத்த விசேட அறிவிப்பில் மேலும் தெரிவித்திருப்பதாவது: தேர்தல் சுமுகமாகவும், ஒழுங்காகவும் நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பொது மக்களுக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் சட்டம், ஒழுங்கு நிலையைத் தொடர்ந்து அமைதியாகப் பேணும் பொருட்டு அவசரகாலச் சட்டங்கள் அமு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்டிறைச்சி என ரெலோ கொடுத்த மனிதத் தலை

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி சிறிலங்கா இராணுவ முகாமில் ரெலோக் குழுவும் முகாமிட்டுள்ளது. அண்மையில் ரெலோ உறுப்பினர் வழியால் போன வயோதிபர் ஒருவரிடம் உரப்பையை கொடுத்துள்ளார். பையில் இருப்பது தாம் உணவுக்காக வெட்டிய ஆட்டின் மிஞ்சிய பகுதிகள் என்று வயோதிபருக்குக் கூறப்பட்டது. வயோதிபரும் வீட்டுக்குச் சென்றுஉரப்பையை அவிழ்த்துப்பார்த்துள்ளார். ஆட்டின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் எழுச்சி நாளும் பொதுக் கூட்டங்களும்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான 60 மைல் கடற்பரப்பைக் கண்காணிக்கும் திறன்வாய்ந்த கப்பலைக் கண்ணிமைக்கும் பொழுதினில் கடந்த நான்காம் திகதி அதிகாலை 1.55 மணியளவில் தம் நெஞ்சையே வெடிகுண்டாக்கி உடலைத் திரியாக்கி, உயிரையே நெருப்பாக்கி எதிரியின் கடற்தளத்தை எரித்துச்சரித்த கடற் கரும்புலிகளான கப்டன் ஜெயந்தன் (மட்டக்களப்பு), கப்டன் சிதம்பரம் (வல்வெட்டித்துறை) ஆகிய காவிய நாயகர்களின் எழுச்சி நாளும், மாபெரும் எழுச்சிக்கூட்டங்களும் அடுத்த வாரம் நடைபெறவுள்ளதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

இந்த எழுச்சிக் கூட்டங்கள் வலிகாமத்தில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியிலும் வடமராட்சியில் வல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை வினாத்தாள்கள் கப்பல்மூலம் யாழ். வரும்

– சுந்தரலிங்கம்

(யாழ்ப்பாணம்)

தடைப்பட்டிருந்த க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான இரண்டாம்தொகுதி வினாத்தாள்கள் எதிர்வரும் பதினைந்தாம் திகதியளவில் கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்துசேருமென யாழ். கல்விப்பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கம் நேற்று ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

இரண்டாம் கட்டப் பரீட்சைக்கான சகலபாடங்களுக்குமுரிய வினாத்தாள்களும் கப்பல்மூலம் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இவை எதிர்வரும் பதினைந்தாம் திகதியளவில் பருத்தித்துறைக்கு வந்துசேருமெனவும் பரீட்சைஆணையாளரால் நேற்றையதினம் வானொலித் தொடர்புசாதனமூலம் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இரண்டாங் கட்டப்பரீட்சைக்கான ஆரம்ப திகதி பரீட்சை ஆணையாள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை நிலையங்களுக்கே விடுமுறை வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த உயர்தரப் பரீட்சைக்கான பரீட்சை நிலையங்களாக இயங்கி வந்த பாடசாலைகளைத் தவிர ஏனைய பாடசாலைகள் தொடர்ந்தும் நடைபெறும் என யாழ். கல்விப் பணிப்பாளர் நேற்றுத் தெரிவித்தார்.

இம் மாதம் நடுப்பகுதியளவில் ஆரம்பமாகவுள்ள க. பொ. த உயர்தர இரண்டாங் கட்டப் பரீட்சைக்கான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காக்காச்சிவெட்டை முகாமில் நால்வர் கைது

### பாலையடிவெட்டையில் ஒருவர்காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அகதி முகாம் மற்றும் பொதுமக்களின் குடியிருப்புக்கள்போன்றவற்றை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்து நான்கு பேரைக் கைதுசெய்ததுடன் ஒருவரைக் காயப்படுத்தியுமுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 7.00 மணியளவில் பாலையடி வெட்டை என்ற பகுதியில் நிலைகொண்டிருந்தசிறிலங்கா இராணுவத்தினர் அதற்கு அண்மையில் உள்ள காக்காச்சி வெட்டை என்னுமிடத்தில் இருக்கும் அகதிமுகாம்ஒன்றை திடீரென சுற்றிவளைத்து அம்முகாமில் தங்கியிருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி



லெப். கேணல்
**புலேந்திரன்**
ஞாபகார்த்த வெற்றிக்
கிண்ணத்திற்கான
7 பேர் கொண்ட
உதைபந்தாட்ட
சுற்றுப்போட்டி

யா.. பெஸ்கி சனசமூக நிலையத்தால் 12-05-91 இன்று குருநகரில் அமைந்துள்ள சென். ரோக்ஸ் மைதானத்தில் மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது. இறுதி நாளில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

நன்றி

குருநகர் பெஸ்கி சனசமூக நிலைய
(B/2497) நிர்வாகிகள்



## 3-ம் ஆண்டு வீர அஞ்சலி

**2ஆம் லெப். சின்னக்காந்தி**
(இராசையா உதயபாலன்
உரும்பராய் கிழக்கு)

| வீர ஜனனம் | வீர மரணம் |
|---|---|
| 1967 - 07 - 09 | 1988 - 05 - 12 |

பகைவனை அழிக்கவே பாசறை புகுந்திட்டு, பாரினில் புதியதோர் சாதனை புரிந்திட்டு
தமிழனை அழிக்கவே வந்த அந்நியனை, புறமுது கிடச்செய்த வீரனே
ஓய்ந்தடோம் ... .... ...
உன் கால்வழி பின்சென்று, கண்டே மகிழ்ந்திடுவோம் தமிழீழத் தாயகம்.
'' புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் ''

இவ்வீரவேங்கையின் நினைவுக் கூட்டம் உரும்பராய் வேதக்கோயில் முன்பாக 12-05-91 மாலை 7 00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் வி. பு. ம. மு. உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவர்.

(B-2494) குடும்பத்தினர், நண்பர்கள்.

## 45 ஆம் நாள் வீர நினைவலைகள்



### வீரவேங்கை கசின்
(கந்தசாமி சிவகுமார், சிவா)

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 12 . 5 . 1970 | 28 . 3 . 1991 |

**ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புச்செல்வமே!**

பாசமிகு தந்தையையும் தாயையும் உன்னோடு
உடன் பிறந்த இருகண்களையும்
தவிக்கவிட்டு நீ எங்கு சென்றாயடா?
சிரித்து சிரித்து கதைகள் பல பேசிவிட்டு
பாதியிலே ஏன் பிரிந்தாய் கண்ணா
உன் நண்பர்களோ நீ சென்ற பாதைகளில்
உன்னைத்தேடி அலைகிறார்களடா.
எங்கள் செல்வமே ஒரு கணப்பொழுதில்
எங்களைத் தவிக்கவிட்டு ஏன்தான் பிரிந்தாயோ?
ஆனாலும் நீ வட்டு நகரிலே உதித்த
வேங்கைகளில் ஒருவனடா.
களத்திலே கசின் என்ற பட்டத்தோடு
கீரிமலையிலே மண்ணிலே மடிந்தாயடா.
கசின் என்று உன் தோழர்கள் உனை அழைக்க
நீ அவர்களை விட்டு எங்கு சென்றாயடா?
உன் பிரிவோ எம்மால்
ஒருபோதும் பொறுக்க முடியாதடா
ஆனாலும் உன்னிடத்திற்கு நாமும்
விரைந்தோடி வந்திடுவோம்.

சுப்பிரமணியம் ஒழுங்கை, உன்பிரிவால்
வடடுகிழக்கு, தாங்கொணாத் துயருறும்
வடடுக்கோட்டை. பாசமிகு அப்பா, அம்மா,
(R/1375) ஆசை அண்ணா, அக்கா, நண்பர்கள், உறவினர்.

## கொய்யாத் தோட்டத்திற்கு கேடயம்

(ஈச்சமோட்டை)

கொய்யாத்தோட்ட சனசமூக விளையாட்டு கழகத்தினருக்கும் ஈச்சமோட்டை சன்ஸ்ரார் விளையாட்டு கழகத்தினருக்கும் இடையில் நேற்று பி.ப மேஜர் அன்ரனியின் ஞாபகார்த்தமாக நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் கொய்யாத்தோட்ட அணி வெற்றிக் கேடயத்தை தட்டிக்கொண்டது. மேற்படி கொய்யாத்தோட்டம் சார்பாக திறம்பட விளையாடி 2 கோல்களை போட்டு வெற்றிகேடயத்தை தட்டியவர் திரு. ப. ஜெயகுமார் (ஜெயா மாஸ்ரர்) என்பது குறிப்பிடத்தக்கது.

(43)

## அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழகம்
இலங்கை

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளுக்கு மாணவர்களிடமிருந்து கீழ்க் காணப்படும் திகதி வரை தேர்வு விண்ணப்பங்கள் பிரதிப்பதிவாளர் / தேர்வுகள் அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கல்வி பட்டப்பின் டிப்ளோமா முழுநேரம், பகுதிநேரம் - பகுதி 1.
பகுதிநேரம் - பகுதி 11
31-05-91

2. இராமநாதன் நுண்கலை (இறுதி) 4 ஆம் ஆண்டுப் பரீட்சை - 24-05-91

மீள்பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 15/- வீதம் பணத்தை பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

- பதிவாளர்

1991-05-10

(B/2495)

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 05 - 12**



**லெப். இளங்கோ**
(இதுதாஸ்பிள்ளை
மேரிதாஸன் - லிங்கநகர்,
திருகோணமலை)

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் வெருகலில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின் போது ஏற்பட்ட மோதலின் பின் சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

லெப். இளங்கோ (இதுதாஸ்பிள்ளை மேரிதாஸன் - லிங்கநகர், திருக்கோணமலை)

இதே ஆண்டு யாழ்ப்பாணத்தில் தவறுதலான கைக்குண்டு வெடிப்பில் எமைப்பிரிந்த

ராம் (தனபாலசிங்கம் - மாவிட்டபுரம்)

இதே ஆண்டு முந்தையான் கட்டில் சிறிலங்காப் படை பதுங்கியிருந்து தாக்கியதில் வீரமரணமடைந்த

சுதன் (அ. சுந்தரராசா - புதுக்குடியிருப்பு)

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமடைந்த

★ வைரமுத்து தங்கத்துரை (L, B, 3 - மூதூர்)

இதே ஆண்டு காயாங்கேணியில் தேசவிரோத சக்திகளால வெட்டிக் கொல்லப்பட்ட

சாபீர் (முகமட்சாபீர்)

1988 ஆம் ஆண்டு உரும்பராயில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

2ஆம் லெப். சின்னக்காந்தி
(இராசையா உதயபாலன் - உரும்பராய் கிழக்கு)

1989 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

பிரான்சிஸ் (சூசைபிரான்சிஸ் - தங்கவேலாயுதபுரம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/ 2496)

## சிந்தனைக்கு

தவறுக்குத்தான் அரசாங்கத்தின் ஆதரவு தேவையாய் இருக்கிறது. வாய்மை, துணை எதுவுமின்றி தன்னந்தனியே நிற்க முடியும்.

— தாமஸ் ஜெஃப்பர்ஸன்

ஈழநாதம்

31 மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 12-05-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம் : 2208
த.பெ.எண்: 05

# இலங்கை விவகாரத்தில் மகாராணியின் தவறு

இலங்கையில் நிகழ்பவை போன்ற துன்பகரமான நிகழ்வுகள் உலகில் மிகக்குறைவு. ஆனால் பாரசீக வளைகுடாப் போர் உலகில நடந்த பல துன்பகரமான சம்பவங்களை மூடி மறைத்துவிட்டது. தொடர்ந்தும் இலங்கையில் இரத்தம் சிந்தப்படுவதைத் தடுப்பது எமது கடமை என பிரித்தானிய பிரபுக்கள் சபையில் பேசிய அதி வணக்கத்திற்குரிய ஆயர் றிப்பன்பிரபு தெரிவித்துள்ளார்.

இலங்கையில், சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலான இனமுரண்பாடு வரலாற்று ரீதியானது. ஆனால் இந்த இனமுரண்பாடு இன்று இலங்கையில் தொடர்ந்து இரத்த ஆறு ஓடுவதற்கு வழிவகுத்ததென்றால் அதன் பெரும்பங்கு 150 வருடங்களுக்கு மேலாக இலங்கையை ஆண்ட பிரித்தானியரையும் சாரும்.

பிரித்தானியர் இலங்கைத் தீவைக் கைப்பற்றியபோது இலங்கை ஒரு தனியான நிர்வாக அலகாக இருக்கவில்லை. 1815 ஆம் ஆண்டு பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிய பின்னரே இலங்கை தனி ஒரு நிர்வாக அலகாகக் கொண்டு வரப்பட்டது.

இலங்கைத் தீவு முழுவதும் ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டபோது சிங்களவர், தமிழர் என இருவேறுபட்ட இனங்கள் இலங்கையில் நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றன என்பதையும், வரலாற்று ரீதியான முரண்பாடுகள் அவர்களுக்கிடையில் உள்ளன என்பதையும் பிரித்தானியர் உணர்ந்திருந்தனர் இதனை அடிப்படையாகக் கொண்டே இலங்கையில் தமது காலனித்துவ ஆட்சியையும்நிலைநிறுத்துவதில் பிரித்தானியர் வெற்றியும் கண்டனர்.

பிரித்தானியர் உலகில் எங்கெல்லாம் குடியேற்றங்களை நிறுவினார்களோ அங்கெல்லாம் இனமுரண்பாடுகளையும், மத முரண்பாடுகளையும் வளர்த்தே தமது காலனி ஆதிக்கத்தை நிலை நாட்டினர் தமது தேவைக்கும் ஏற்ப பல இடங்களில் சிறுபான்மை இனங்களுக்கு சாதகமான முடிவுகளையும் சில இடங்களில் பாதகமான முடிவுகளையும் எடுத்தனர்.

ஆனால், பிரித்தானியர் இனங்களுக்கு சாதகமான முடிவுகாண எடுத்தலும், பாதகமான முடிவு காண எடுத்தாலும் அவர்களினால் உருவாக்கப்பட்ட அல்லது வளர்த்துவிடப்பட்ட முரண்பாடுகள் இன்றும் தீர்ந்ததாக இல்லை.

பிரிட்டிஷ் இந்தியாவில் சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கு சாதகமான முடிவை எடுத்தனர். ஆனால் இன்றும் இந்திய பாகிஸ்தான் முரண்பாடு தீர்ந்துவிடவில்லை. அதேவேளை இலங்கையில் சிறுபான்மையினருக்கு பாதகமான முடிவை எடுத்து பெரும்பான்மையினரின் ஆட்சிக்கு வழிவகுத்தனர். இங்கும் பிரச்சினை தீர்ந்துவிடவில்லை.

பிரித்தானியர் காலனியாதிக்கத்தை நிறுவ முன்னர் இப்பிரதேசங்களில் இன, மத முரண்பாடுகள் இருக்கவில்லை எனக் கூறவில்லை ஆனால், பிரித்தானியர் காலனியாதிக்கத்தை விஸ்தரித்தபோது தனித்தனி அலகுகளாக இருந்த முரண்பாடுகள் கொண்ட இனங்களையும், மதங்களையும் தமது வசதிக்காக ஒரு நிர்வாக அலகுகளாக்கியமையாலேயே இந்நெருக்கடிகள் தீவிரமடைந்தன இந்நெருக்கடிகள் தமது வசதிக்காக பிரித்தானியரால் மறைமுகமாக தூண்டியும்விடப்பட்டன.

இந்நிலையில். இன்று இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலைக்கு பிரித்தானியரும் ஒரு வகையில் காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது ஆகையினால் அதி. வண. ஆயர் றிப்பன்பிரபு குறிப்பிட்டது போன்று இலங்கை விவகாரத்தில் பிரித்தானியாவிற்கு சில கடமையுண்டு தமிழருக்குக் கடந்த காலத்தில் செய்த துரோகத்திற்குப் பிராயச்சித்தம் தேடுவதே அதுவாகும்.

மாட்சிமை தங்கிய மகாராணியாரின் ஆட்சியில் விடப்பட்ட இத்தவறுகளுக்கு பிராயச்சித்தம் மனிதஉரிமை மீறப்படுவதைக் கவனித்துக் கொண்டிருக்கிறோம்; கவலைப்படுகின்றோம் என்பதால் மட்டும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. சிறிலங்காவின்மீது அழுத்தங்களை ஏற்படுத்தக் கூடியதான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பிரித்தானியரின் கோட்பாடான ''மகாராணியார் தவறு விடுவதில்லை'' என்ற மரபு மெய்ப்பிக்கப்படும்.

# ஏப்ரல் மாதத்தில் தென்தமிழீழம்

சிறிலங்கா இராணுவத்தினர் தமது சேமிக்கை நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்துவதற்காகப் பொதுமக்களிடம் வரி வசூலிப்பதில் ஈடுபட்டு உள்ளனர். திருக்கோயில், தம்பிலுவில் போன்ற அம்பாறை மாவட்டத்தின தமிழர் கிராமங்களிலிருந்து விறகு, கரி மற்றும் மண் என்பன போன்ற பொருள்களை ஏற்றி வரச் செல்பவர்களிடம் இத்தகைய வரி வசூலிப்பு செய்யப்படுகிறது. ஐந்து ரூபா தொடக்கம் ஐநூறு ரூபா வரையிலான தொகைப் பணம் இவ்விதம் இராணுவத்தினரால் வரியாகப் பெறப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்குள் அமைந்திருந்த சின்னவத்தை, 13 ஆம் கிராமம், 14 ஆம் கிராமம், பாலையடி வெட்டை, காக்காச்சி வெட்டை, 35 ஆம் கிராமம் போன்றன அண்மையில் அம்பாறை மாவட்டத்தின் நிர்வாகப் பிரிவுக்குள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிகளிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றுவதை இலக்காகக் கொண்டு சிறிலங்கா இராணுவத்தினர் இம்சரித் தொல்லைப்படுத்தி வருகின்றனர் அடிக்கடி இடம்பெறும் துப்பாக்கிப் பிரயோகம், சுற்றிவளைப்புகள், கைதுகள் உட்பட உலங்குவானூர்திகளால் தாக்கப்படுதலும் தொடர்கதையாகியுள்ளது.

பிரதான பாதைகளில் அமைந்திருக்கும் சிறிலங்கா இராணுவ முகாம்களிலிருந்து அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுவதாலும். கிராமப்புறங்களுக்கான போக்குவரத்து வசதி குறைவாக இருப்பதாலும், அரசின் இரகசிய கொலைப்படைகளின் அச்சுறுத்தலினாலும், பொதுமக்கள் தனித்து நடமாடவே தயங்கும் நிலை காணப்படுகிறது. அரசின் சிவில் நிர்வாக அதிகாரிகள்கூட எல்லா இடங்களுக்கும் செல்லத் தயக்கம் கொண்டுள்ளனர்

மட்டக்களப்பு மாவட்டத்தின வெல்லாவெளி, பாலையடி வெட்டை, 37 ஆம் கிராமம், 38ஆம் கிராமம், 39 ஆம் கிராமம், சின்னவத்தை, கல்வெட்டை, நெடியவெட்டை போன்ற கிராமங்களைவிட்டு இராணுவ அச்சுறுத்தல் காரணமாக தமிழ் மக்கள் வெளியேறி உள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் மல்வத்தை. வீரமுனை, பொத்துவில், நற்பிட்டிமுனை, சென்றல்காம்ப், நான்காம்கொலனி போன்ற முஸ்லிம் கிராமங்களை அண்டியுள்ள தமிழர் கிராமங்களிலிருந்தும் தமிழ் மக்கள் வெளியேறி உள்ளனர். வெளியேறிய மக்கள் மீண்டும் தமது இடங்களுக்கு செல்ல முடியவில்லை என்பதுடன், அவர்களது வீடுகள் உடைக்கப்பட்டும், சொத்துகள் சூறையாடப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அகதிமுகாம்கள்கூட அடிக்கடி இராணுவத்தினராலும், முஸ்லிம் ஊர்காவல்படையினராலும் சுற்றிவளைக்கப்படும். ஆண்கள் கைது செய்யப்பட்டு கொடூரமான முறையில் தாக்கப்படுகின்றனர். சிலர் காணாமல் போகின்றனர்

தனித்துச் செல்லும் வயது வந்த இளைஞர்கள் குறிப்பாக மேல்வகுப்பு மாணவர்கள்கூட காணாமல் போய்விடுகின்றனர். காலையில் கிராமங்களைச் சுற்றி வளைக்கும் இராணுவத்தினரால் பாடசாலை செல்லும் மாணவர்கள் சிரமப்பட வேண்டியதாகிறது இரவு நேரங்களில் வான்களில் வருகின்ற அரசின் இரகசிய கொலைப்படையினரால் வீடுகளில் வைத்தே கடத்திச் செல்லப்படுவதும் நாளாந்த நிகழ்ச்சியாக உள்ளது.

இவ்வாறாக நாளாந்தம் துன்பங்களைச் சுமக்கும் தென் தமிழீழப் பகுதியின் ஏப்ரல் மாதத்தில் மட்டும் நடந்த சம்பவங்களின் தொகுப்பை இங்கே காணலாம்.

| திகதி | இடம் | சம்பவம் | பாதிக்கப்பட்டவர் பெயர்கள் |
|---|---|---|---|
| 04-04-91 | அலிக்கம்பை, அம்பாறை | விறகு வெட்டச் சென்ற தமிழ் பொது மக்கள் ஐவர் சிங்கள ஊர்காவல் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டனர். | |
| 06-04-91 | விநாயகபுரம், சின்னத்தோட்டம் | கிராமத்தைச் சுற்றி வளைத்த விசேட அதிரடிப் படையினர் 150பேரை முகாமிற்கு கொண்டு சென்றனர் | |
| 07-04.91 | காந்திபுரம், திக்கோடை, யானைகட்டியவெளி 40 ஆம் கிராமம் | சிறிலங்கா இராணுவமும் புளொட், ரெலோவும் சேர்ந்து சுற்றி வளைத்தனர். | 40 ஆம் கிராமத்தைச் சேர்ந்த ஏழு பொது மக்கள் கைது |
| 07-04-91 | தும்பங்கேணி | புடைவைக்கடை, தேநீர்க்கடை, சலூன்.லோன்றி சில்லறைக்கடை இராணுவத்தினராலும் ரேலோவினராலும் சேதமாக்கப்பட்டது. | கன்னமுத்து மகேந்திரன் வே. கணேசமூர்த்தி குணநாயகம் மா. சின்னத்தங்கம். |
| 09-04-91 | காந்திபுரம், தும்பங்கேணி | இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் சடலங்களும் எரிக்கப்பட்டன. | சிதம்பரம் ஜெயக்குமார் (23வயது பழுகாமம் - 2) ஆறுமுகம் சந்திரசேகரம் (வயது 22 தும்பங்கேணி) |
| 09-04-91 | மண்டூர் | இராணுவத்தாலும், ரேலோவினராலும் வெட்டிக் கொல்லப்பட்டனர். | கந்தன் கறுவல்தம்பி(வயது60) வைரமுத்து கணேசபிள்ளை (வயது 40, அழகையா திருத்தணி வயது18) |
| 09-04-91 | வந்தாறுமூலை | இராணுவத்தினரால் கைது | நாகமணி செல்வநாயகம் (வயது 23) |
| 09-04-91 | வந்தாறுமூலை | இரவில் வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டார். | தங்கராசா என்பவரின் மகன் (வயது 18) |
| 13-04-91 | 13ஆம் கிராமம், மண்டூர் | கத்தியால் குத்திக் கொலை செய்தது இராணுவம் | முருகேசு கோவிந்தராசா (வயது 21) திருமணமானவர். |

(மிகுதி நாளை தொடரும்)

# அரபு பிரதேசத்தில் யூதர்குடியேற்றங்கள்; சமாதானமாநாட்டிற்குதடை!

(அம்மான்)

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் நிறுவப்படும் இஸ்ரேலிய குடியிருப்புகள் மத்திய கிழக்கு சமாதான மாநாட்டிற்கு தடையாக இருப்பதாக சோவியத் யூனியன் நேற்று முன்தினம் குறிப்பிட்டுள்ளது

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் யூதக் குடியேற்றங்களை இஸ்ரேலிய அரசாங்கம் நிறுத்தும் வரையில் சோவியத் யூனியனிலிருந்து யூதர்கள் இஸ்ரேல் செல்வதைத் தடை செய்யப் போவதாக சோவியத் அரசாங்கம் அச்சுறுத்தல் விடுத்துள்ளது. சோவியத வெளியுறவு அமைச்சர் அலெக்சாண்டர் பெஸ்மட்னிக் ஜோர்தான் மன்னர் உசேனை அம்மானில் சந்தித்து பேசனார். அப்போது மேற்கண்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டது.

ஆக்கிரமிக்கப்பட்ட அரபு மண்ணில் யூதக் குடியேற்றம் பற்றி சோவியத் வெளியிட்ட மிகக் கடுமையான கருத்துக்கள் இவையென்று தெரிகிறது சோவியத் யூதர்களின் இடம் பெயர்வு பிராந்தியத்தில ஒரு சில பதற்றத்தை ஏற்படுத்தக் கூடும் என்று சோவியத வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார். கடந்த இரண்டு வருடத்தில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான யூதர்கள் சோவியத்திலிருந்து இஸ்ரேலுக்கு குடிபெயர்ந்து உள்ளார்கள்.

இதனிடையில் அரபு - இஸ்ரேலிய சமாதான பேச்சுவார்த்தை ஏற்பாடு செய்ய முன்னர் சோவியத் யூனியன் இஸ்ரேலுடன் முழு அளவிலான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த வேண்டும் என்று இஸ்ரேல் கூறியுள்ளது எனினும் நிலைமைகள் சீரடையும்போது இராஜதந்திர உறவுகளும் சீரடையும் என்று பெஸ்மட்னிக் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கால்நடை ஏற்பு தடுப்பூசி தட்டுப்பாடு

வடமராட்சிப் பகுதியில் கால்நடைகளுக்கான ஏற்பு நோய்த் தடுப்பூசிக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் வடமராட்சிப் பகுதியில் பெருந்தொகையான ஆடுகள் இறந்து வருவதாக இப்பகுதி ஆடுகள் வளர்ப்போர் கவலை தெரிவித்துள்ளனர்.

(25)

தமிழ் அகதிகள் இலங்கை திரும்பும்

# சூழ்நிலையை உருவாக்குமாறு இந். அரசை வற்புறுத்துவோம்

(மணிலா)

வரவிருக்கும் சட்டசபை மற்றும் மக்களவைத் தேர்தல்களுக்காகத் தி.மு.க வெளியிட்டுள்ள பதினெட்டுப் பக்கத் தேர்தல் அறிக்கையில் ஒரேயொரு பந்தி மட்டுமே ஈழத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசுகிறது. அப்பந்தியின் வாசகங்கள் கீழ்வருமாறு அமைகிறது என வெரித்தாஸ் வானொலி நேற்றிரவு அறிவித்தது.

தமிழகத்தில் இலங்கைத் தமிழ் போராளிக் குழுக்களின் வன்முறைச் செயலுக்கோ, சமூக விரோத காரியங்களில் ஈடுபடுவதற்கோ தி.மு.கவும், தி.மு.க அரசும் தமது கண்டனத்தைத் தெரிவித்ததுடன், அதற்கான நடவடிக்கைகளையும் அவ்வப்போது எடுத்து வந்துள்ளது. இதேநேரத்தில் தமிழீழத்து மக்களின் உரிமைகளை நசுக்கும் போக்கை எதிர்த்து எழுப்பப்படும் எந்தக் குரலையும் தி.மு.க ஆதரிப்பதுடன் தமிழீழத்தில் உரிமையுடன் கூடிய அமைதி நிலவிடவும், தமிழ்நாட்டிற்கு வந்திருக்கும் இலட்சக் கணக்கான ஈழத் தமிழ் அகதி மக்கள் இலங்கை திரும்பிச் செல்வதற்கேற்ற சுமுகச் சூழ்நிலை ஏற்படவும் இந்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## பங்களாதேஷில் நிலநடுக்கம்

(டாக்கா)

பங்களா தேசத்தின் தலைநகரில் நேற்றுக்காலை சுமாரான நிலநடுக்கமொன்று ஏற்பட்டது. மக்கள் பீதியினால் வீதிகளுக்கு ஓடினார்கள். உயிர்ச்சேதம், பொருள்சேதம் பற்றிய விபரங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. டாக்காவை அதிரச் செய்த நிலநடுக்கம் பற்றிய விபரங்களை பங்களாதேஷ் வானிலை அவதான நிலையம் தெரியப்படுத்தவில்லை. சுமாரி எழுபது இலட்சம் சனத்தொகையைக் கொண்ட டாக்கா நகரில் ஏற்பட்ட நிலநடுக்கம் பெரும் பரபரப்பையும் பீதியையும் ஏற்படுத்தியிருந்தது.

### பரீட்சை நிலையங்களுக்கே

பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள பாடசாலைகளே பரீட்சை முடியும்வரை விடுமுறைக்காக மூடப்படும் எனவும் ஏனைய பாடசாலைகள் விடுமுறைக்காக மூடப்படாது தொடர்ந்தும் இயங்கும் எனவும் யாழ். கல்விப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## கூட்டமும் கலைநிகழ்ச்சியும்

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 10 வது ஆண்டு விழாவை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 7.00 மணியளவில் கூட்டமும் அதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். மேஜர் அன்ரனி, மேஜர் டயஸ் ஞாபகார்த்தமாக நடைபெற்ற நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசளிப்பு வைபவமும் அதைத் தொடர்ந்து அரியாலை பிரதேச பொறுப்பாளர் பாண்டியனின் உரையும் இடம்பெறும். (43)

## விசர் நாய் கடித்த இளைஞர் மரணம்

(செ. த. மை.)

விசர் நாய்க் கடிக்கிலக்கான இளைஞர் ஒருவர் நீர்வெருட்சி நோய் பீடித்து மரணமானார். புத்தூரைச் சேர்ந்த க. யோகராசா (28) என்பவரே மரணமானவர். சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் ஊரிலுள்ள நாயொன்று இவரைக் கடித்தது. கடிவாய்க்கு மருந்துகட்டி சுகமடைந்திருந்த போதிலும் கடந்த 6ம் திகதி நீரைக்கண்டு வெருட்சி அடைந்து அவதிப்பட்டார். உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. 8ஆம் திகதி மரணமானார்.

## இளம்பெண் தற்கொலை

(செ. த. மை)

குடும்பக்கஷ்டத்தால் இளம் பெண் தற்கொலை செய்து கொண்டார். புத்தூர்கிழக்கை சேர்ந்த ஞானசோதி ஞானசுப்பிரமணியம் என்பவரே தற்கொலை செய்துகொண்டவராவார். இவரது தந்தை சலரோக நோயாளியானபடியால் குடும்ப சீவியத்தைக் காப்பாற்ற முடியாத நிலையிலுள்ளாரென்றும் இன்றைய பொருளாதாரக்கஷ்டத்தால் வாழ்க்கையில் விரக்தியுற்ற இந்த இளம்பெண் கடந்த 7ஆம் திகதி நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## வடையில் கலப்படம்

(செ. த. மை)

சாவகச்சேரி-கண்டி வீதியில் சிற்றுண்டிக் கடை ஒன்றில் விற்பனை செய்த வடையில் கலப்படம் செய்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கடந்த 8ஆம், 9ஆம் திகதிகளில் விற்பனை செய்த வடைகள் 'சம்போ' கலந்த தேங்காயெண்ணையில் பொரிக்கப்பட்டிருந்ததாம்.

இது சம்பந்தமாக விசாரணை மேற்கொண்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் நகரப்பொறுப்பாளர் கடை உரிமையாளரைக் கைது செய்துள்ளார். தேநீர்க் கடையும் மூடப்பட்டுள்ளது.

### புதுக்குடியிருப்பிற்கு

இதேவேளை, மாலை மூன்று மணிக்குப் புதுக்குடியிருப்பில் இருந்து புறப்படும் பேருந்து மாலை 6. 30 மணியளவில் சங்குப்பிட்டியை வந்தடையும் எனவும் இச்சேவைக்குப் பொறுப்பான போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (மு)

### பரீட்சை வினாத்தாள்கள்

ரால் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் விரைவில் அறிவிக்கப்படுமெனவும் பரீட்சைநேர அட்டவணையில் நிறுத்தப்பட்ட பாடத்திலிருந்து பரீட்சை தொடருமெனவும், பெரும்பாலும் பரீட்சை வினாத்தாள்கள் வந்துசேர்ந்த ஒருசில நாட்களில் பரீட்சை ஆரம்பமாகும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

காரைநகரில் சிக்கிய

## மக்கள் பற்றிய தகவல்தர இராணுவம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் சிக்கியுள்ள பொதுமக்களின் நிலை தொடர்பான தகவல்களைப்பெற்றுக் கொள்ள சிறிலங்கா இராணுவத் தலைமை அலுவலகம் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகின்றது என சர்வதேச நிவாரண அமைப்பொன்றின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அமைப்பின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பொதுமக்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் காரைநகரில் சிக்கியுள்ள பொதுமக்களை மீட்பது தொடர்பாக தினமும் தமது தலைமை அலுவலகம் கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு வருவதாகவும் எனினும் அப்பகுதிகளுக்குச் சென்று பொது மக்களின் நிலை பற்றி அறிந்து வருவதற்கு இராணுவத்தின் தலைமை அலுவலகம் அனுமதி தராமல் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (க)

## சிவ்சங்கரின் மகனை நக்சலைட்டுகள் கடத்தினர்

(ஹைதராபாத்)

ஆந்திர மாநில சட்டப் பேரவை உறுப்பினரும், முன்னாள் மத்திய அமைச்சர் சிவ்சங்கரின் புதல்வருமான திரு. சுபோத்குமார் நேற்றுக்காலை ஆயுதம் தாங்கிய நபர்களால் கடத்தப்பட்டுள்ளார். ஹைதராபாத் நகரிலுள்ள அவரது வீட்டுக்குள் புகுந்த துப்பாக்கி நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப் பட்டார். அதன் பின் திரு. சுபோத்குமார் கடத்திச் செல்லப்பட்டார். பிந்திக்கிடைத்த செய்திகளின்படி கடத்திச் செல்லப்பட்ட சுபோத்குமார் விடுதலை செய்யப்பட வேண்டுமாயின் சிறையிலிருக்கும் தமது சகாக்கள் நால்வர் இருபத்து நான்கு மணி நேரத்தினுள் விடுவிக்க வேண்டுகோள் விடுத்திருப்பதாக தெரிய வருகிறது.

### காக்காச்சிவெட்டை

35ஆம் கிராமத்தைச் சேர்ந்த தம்பிராசா குமரேசமூர்த்தி (வயது 25), காக்காச்சிவெட்டையைச்சேர்ந்த சமரவிக்கிரம் அரியரத்தினம் (வயது27), தம்பிப்பிள்ளை பேரின்பம் (வயது 22), கணபதிப்பிள்ளை சிவலிங்கம் (வயது 25) ஆகியோரைக் கைதுசெய்து தமது முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

மேலும் நேற்றுக் காலை 6.30 மணியளவில் பாலையடி வெட்டையிலுள்ள வீடு ஒன்றைச் சுற்றிவளைத்து சரமாரியாகத்துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 37ஆம் கிராமத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான ரட்ணராசா என்பவர் காயமடைந்துள்ளார்.

### கரும்புலிகள்

வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் கழக மைதானத்திலும் தென்மராட்சியில் மட்டுவில் சரஸ்வதி வித்தியாலய மைதானத்திலும் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளன.

இக் கடற் காவிய நாயகர்களின் எழுச்சிக் கூட்டத்தில் தமிழீழமக்கள் அனைவரையும் அணி அணியாகத் திரண்டு வந்து இக்கடற் கரும்புலிகளின் கனவை நனவாக்க உறுதி பூணுமாறும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மீண்டும்

லுக்கு வருவதாக அறிவித்துள்ளது. இதன் பிரகாரம் கூட்டம் கூடுதல், ஊர்வலம்செல்லுதல், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடல் என்பன போன்ற நடவடிக்கை அனைத்தும் பொலிஸாரால் தடை செய்யப்பட்டுள்ளன

### கட்டுமரங்கள்

தொழிலாளர்களும் கடலுள் குதித்து நீரினுள் மறைந்து கொண்டதால் உயிர்ச்சேதம் எதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

நேற்றுமுன்தினம் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. சுமார் 10 நிமிடம்வரை இத்தாக்குதலை மேற்கொண்ட விசைப்படகு திரும்பிச் சென்றதும் கடற்றொழிலாளர்கள் எதுவித இழப்புக்களுமின்றிக்கட்டுமரங்களுடன் கரை வந்து சேர்ந்தனர்.

### ரெலோ

பகுதிகளுக்குப் பதிலாக மனிதத் தலைஒன்று பையினுள் கிடந்துள்ளது. மனிதத்தலையைக் கண்ட வயோதிபர் மயக்கம் போட்டு விழுந்தார்.

## பஞ்சாயுதம் பரிசு

(செ. த. மை.)

அகில இலங்கை ரீதியில் 1989இல் நடைபெற்றகுழந்தைகளுக்கான சின்னமுத்து நோய் தடுப்பு மருந்தை ஒழுங்காகப் பெற்றுக்கொண்டது சம்பந்தமாக நடைபெற்றபோட்டியில் சிறுப்பிட்டியைச் சேர்ந்த சே. தினேஷ்ராஜா (வயது 11)என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கு இம்மாதம் 16ஆம் திகதி கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தங்கப் பஞ்சாயுதம் பரிசாக வழங்கப்படவுள்ளது.

### உள்ளூராட்சித் தேர்தல்

★ அம்பாந்தோட்டை நகர சபை
ஐ. தே. க - 5
சிறி. ல. சு. க - 3
முஸ்லிம் காங். - 1

★ பண்டாரவளை நகரசபை
ஐ. தே. க - 6
சுயேட்சைக் குழு (இரண்டு) - 3

★ தங்காலை-நகரசபை (அம்பாந்தோட்டை மாவட்டம்)
ஐ. தே. க- 5
சிறி. ல. சு. க - 1
சுயேட்சைக் குழு (ஒன்று) -3

★ பத்தேகம நகரசபை (கண்டி மாவட்டம்)
ஐ. தே. க. - 6
சிறி ல. சு. க. -3

### உள்ளூராட்சித்

ளைப் பதிவு செய்ததாகவும் எத்தகைய அசம்பாவிதங்களும் இன்றித் தேர்தல்கள் அமைதியாக நடைபெற்றதாகவும் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

அவர்மேலும் கூறுகையில் வாக்குகள் எண்ணும் வேலை 1070 நிலையங்களில் ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது. இந் நிலையங்களில் பிற்பகல் 4-30 மணிக்கு தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் வேலையுடன் வாக்குகள் எண்ணப்படுதல் ஆரம்பிக்கப்பட்டது. முடிவுகள் அனைத்தும் இன்று நண்பகலுக்குச் சற்றுப் பின்னர் வெளியிடப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும் குறிப்பிட்டார்.

## செஞ். சங்கக் கிளைச் சபை நிர்வாகத் தெரிவு

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை (14-05-91) மாலை 3.30 மணியளவில் செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையில் கிளைச் சபைக்குரிய நிர்வாகத் தெரிவு நடைபெறும். இதற்கு அங்கத்தவர்கள் சமுகம் தரும்படி வேண்டப்படுகிறார்கள். இவ்வறிவித்தல் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்களுக்கு மட்டும் பொருந்தும் என்று சங்கத்தின் கௌரவ செயலர் கு. சற்குணலிங்கம் தெரிவிக்கிறார். (B- 2499)


## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி குமாரசாமி

(இளைப்பாறிய ஆசிரியை, உசன் இ. ம. வி.)

உசனைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி குமாரசாமி அவர்கள் 11 - 05 - 91 சனிக்கிழமை (நேற்று) காலமாகி விட்டார்.

இவர் குமாரசாமி (G. S உசன்) யின் அன்பு மனைவியும், ராஜேந்திரா (B. B. A.), சோமகலா சிறிதரன் (ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, பலாலி), ரவீந்திரா (1ஆம் வருட விஞ்ஞானபீடம் யாழ். பல்கலைக்கழகம்), கிருஷ்ணகலா (ம. ம. வி. சாவகச்சேரி), புவனேந்திரா (கொக்குவில் இ. க.) ஆகியோரின் அன்புத் தாயாரும், வன்னியசிங்கம், காலஞ்சென்ற பாலசிங்கம், பரமேஸ்வரி மணிவர்ணன் (G. S. கரம்பகம்) ஆகியோரின் சகோதரியும், சிறிதரன் (T. A.) அவர்களின் மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 12 - 05 - 91 ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3 மணியளவில் உசன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

''திருப்பதி''
உசன்,
மிருசுவில்.

தகவல்:
க. குமாரசாமி
(R/1384)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.